# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109712

1. District : மாவட்டம் திருவாரூர் PS: காவல்நிலையம் V&AC திருவாரூர் Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 12/2021 Date: நாள் 11-12-2021

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 13(2) R/W 13(1)(a), 12 of PC Act as amended in 2018
(ii) Act சட்டம்: U/s. 102 Crpc, 120B, 420 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 409, 466, 471 of IPC Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் D/O Date to : நாள் வரை 10.12.2021 15.30hrs to 22.00hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் D/R Time to : நேரம் வரை
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.12.2021 Time நேரம் 04.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் 11.12.2021 0400hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 km வடமேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. ராமசந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. ராமசாமி
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 54/21 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
எதிரிகள் A1 முதல் A14 - விபரங்கள் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால் ஆகிய நான் 11.12.2021ந் தேதி 03.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது தஞ்சாவூர் மாவட்ட துணைஆய்வு குழு அலுவலர் R.ராமச்சந்திரன் என்பவர் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்: R.ராமச்சந்திரன், த/பெ. ராமசாமி, மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர், தஞ்சாவூர். பெறுதல்: காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலராகிய நான் 10.12.2021 அன்று பணியில் இருந்த போது திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலக ஊழியர்கள் விவசாயிகளுக்கு மானியத்தில் விதைஉளுந்து மற்றும் விதைநெல் வழங்குவதில் முறைகேடு நடைபெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

RR 11/12/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் B.V. Nandagopal
Rank நிலை DSP, VAC, TVR. No எண் .........

15.30 மணிக்கு வந்தும், மேற்படி அலுவலகத்தில் இரவு 10.00 மணிவரை சோதனை செய்ததில் **துணை வேளாண்மைஅலுவலர் திரு.மாறன்** அவர்களிடமிருந்து ரூ.1,68,400/-ம், கிடங்கு கண்காணிப்பாளர் **திருமதி.சாந்தி** என்பவரிடமிருந்து **ரூ.2,33,600/-ம்,** கிடங்கு மேலாளர் **திரு.சண்முகம்** அவர்களிடமிருந்து ரூ.**11,66,400/-ம்,** கிடங்கு மேலாளர் **திரு.தியாகராஜன்** என்பவரிடமிருந்து ரூ.7,06,250/-ம், ஆத்மா திட்ட பிளாக் டெக்னாலஜி மேனேஜர் **திரு.விக்னேஷ்** என்பவரிடமிருந்து ரூ.40,000/-ம் ஆக மொத்த தொகை ரூ.23,14,650/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் குறித்து விசாரணை செய்ததில் வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குனர் **திரு.பாலசுப்பிரமணியன்** என்பவர் சொன்னதின் பேரில் **ASO** கோபாலகிருஷ்ணன் அவர்கள் மூலம் விவசாயிகளுக்கு மனியத்தில் வழங்க வந்திருந்த விதைநெல் மற்றும் விதை உளுந்தை முறைகேடாக வெளிநபர்களிடம் விற்பனை செய்திருப்பதும் இதற்கு வேளாண்மை அலுவலர் **திருமதி.கோமதி,** துணை வேளாண்மை அலுவலர் திரு.**N.**மாறன், உதவி வேளாண்மை அலுவலர்கள் **V.**சிந்து, **திரு.செந்தில்குமார், திரு.மோகன்ராஜ், திரு.மாணிக்கவாசகம், திரு.இளையராஜா, திரு.அண்ணாதுரை** ஆகியோர் மற்றும் கிடங்கு கண்காணிப்பாளர் மற்றும் மேலாளர்கள் **திருமதி.சாந்தி, திரு.சண்முகம், திரு.தியாகராஜன்** ஆகியோர் இதற்கு உடந்தையாக இருந்துள்ளார்கள் என தெரியவந்துள்ளது. மேலும் ஆத்மா திட்ட அலுவலர் **திரு.விக்னேஷ்** என்பவர் திட்டத்திற்காக அரசு ஒதுக்கியுள்ள தொகையினை முறையாக செலவழிக்கவில்லை எனவும், இதிலும் முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரியவருகிறது. எனவே மேற்படி அலுவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள Sd (xxxxxxxxxxx 11/12/21 R.ராமச்சந்திரன்) Sir, On 11.12.2021 at 03.30 hrs I received a complaint from the Deputy Inspection cell officer, Thanjavur and registered a case in V&AC Thiruvarur Cr.No.**12/2021** u/s 102 Cr.P.C, 120B, 420, 409, 468, 471 of IPC and 13(2) R/w 13(1) (a), 12 of the P.C. Act 1988 as amended in 2018 on 11.12.2021 at 04.00 hrs. Sd (XXXXXX) **11/12/21** (B.V.நந்தகோபால்) DSP, V&AC, TVR. திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று **10.12.2021**-ந் தேதி திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தாலுக்கா, வலங்கைமான் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு மானியத்தில் விதை உளுந்து மற்றும் விதை நெல் வழங்குவதில் முறைகேடு நடைபெறுவதாக கிடைத்த தகவலின் பேரில்தஞ்சாவூர் மாவட்ட துணைஆய்வு குழு அலுவலர்R.ராமச்சந்திரன் ஆகிய நான் மற்றும்R.ஜெகதீசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர்என்பவருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றும், மேற்படி தகவலை தெரிவித்தும், அதன் பொருட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்வதற்காக திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இன்று **10.12.2021**-ந்தேதி **14.30** மணியளவில் புறப்பட்டும், வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு **15.30** மணியளவில்

வந்தும், மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கை விவரம். இந்த திடீர் சோதனை குழுவில் இருந்த அலுவலர்கள் விவரம்: 1. திரு.R.ராமச்சந்திரன் 54/21, த/பெ ராமசாமி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர். 2. திரு.R.ஜெகதீசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர். 3. திரு.B.V.நந்தகோபால், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். 4. திருமதி.G.R.சித்ரா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவாரூர். திடீர் சோதனை குழுவினரை மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுலவர்களுக்கு அறிமுகம் செய்து கொள்ளப்பட்டது.மேற்படி திடீர் சோதனையின் போது திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலர்கள் விவரம். 1. திரு.த.பாலசுப்பிரமணியன், த/பெ தங்கவேல், வேளாண்மை உதவி இயக்குனர், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 2. திருமதி.கோமதி, க/பெ கோபிநாத், வேளாண்மை அலுவலர், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 3. திரு.மாறன், த/பெ நீலமேகம், துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 4. திரு.கோபாலகிருஷ்ணன், த/பெ லெட்சுமணன், உதவி விதை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான். திருவாரூர் மாவட்டம். 5. செல்வி.சிந்து, த/பெ வரதராஜன், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 6. திருமதி.சாந்தி, த/பெ சண்முகவேல், விதை கிடங்கு கண்காணிப்பாளர், (பிணையம்) வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 7. திரு.சண்முகம், த/பெ முருகன், கிடங்குமேலாளர், ஆலங்குடி, ஹரித்துவாரமங்கலம், வலங்கைமான் வட்டாரம், திருவாரூர் மாவட்டம். 8. திரு.தியாகராஜன், த/பெ. ஜெயராமன், உதவி விதை அலுவலர் பொறுப்பு கிடங்கு மேலாளர், ஆவூர் வேளாண்மை விரிவாக்க மையம். 9. திரு.செந்தில்குமார் த/பெ திருவநாவுகரசு, வேளாண்மை உதவி அலுவலர், வலங்கைமான், வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். 10. திரு.மோகன்ராஜ், த/பெ ராஜவேல், வேளாண்மை உதவி அலுவலர், கொட்டையூர், வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். 11. திரு.மாணிக்கவாசகம், த/பெ ராஜமோகன், வேளாண்மை உதவி அலுவலர், ஆலங்குடி, வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். 12. திரு.இளையராஜா த/பெ சின்னப்பிள்ளை, வேளாண்மை உதவி அலுவலர், ஆவூர் வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். 13. திரு.அண்ணாதுரை, த/பெ ராமச்சந்திரன், வேளாண்மை உதவி அலுவலர், ஊத்துக்காடு, வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம். 14. திரு.விக்னேஷ், த/பெ பழனிச்சாமி, பிளாக் டெக்னாலஜி மேனேஜர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 15. செல்வி.கவிதா த/ப ஜானகிராமன், இளநிலை உதவியாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 16. செல்வி. தீபா, த/பெ விஸ்வநாதன், டேட்டா என்ட்டரி ஆப்பரேட்டர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 17. திருமதி.இசக்கியம்மாள், க/பெ குணசீலன், பயிர் அறுவடை பரிசோதனையாளர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான். திருவாரூர்

மாவட்டம். 18. செல்வி.பிரியங்கா, த/பெ சரபோஜி, உதவி தொழில் நுட்ப மேலாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 19. திரு.சதீஷ்குமார் த/பெ இளவரசன், உதவி தொழில் நுட்ப மேலாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 20. திரு.நவீன்குமார், த/பெ செல்வமணி, பயிர் அறுவடை பரிசோதனையாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 21. திரு.தமிழரசன், த/பெ தங்கமணி, இரவு காவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 22. திரு.வினோத்மார்கோ, த/பெ ராதா, பயிர் அறுவடை பரிசோதனையாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 23. திரு.பிரபு, த/பெ இராதாகிருஷ்ணன், விதைச்சான்று அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 24. செல்வி.அனுசியா, த/பெ காசிநாதன், பயிர் அறுவடை பரிசோதனையாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 25. திரு.அறிவுமணி, த/பெ குமரன், இரவு காவலர், பயிர் அறுவடை பரிசோதனையாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். 26. திரு.பாலமுருகன், த/பெ பூவான், உதவி தோட்டக்கலை அலுவலர், பயிர் அறுவடை பரிசோதனையாளர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம். வலங்கைமான் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமானிலிருந்து நீடாமங்கலம் செல்லும் சாலையில் வலங்கைமானிலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவில் தெற்கில் அரசினர் பெண்கள் மேல்நிலை பள்ளி அருகே அமைந்துள்ளது. மேற்படி அலுவலகம், அலுவலகத்தின் வடபுறம் விதை சுத்திகரிப்பு நிலையமும், இதற்கு கீழ்புறம் வலங்கைமான் கிடங்கும், இதற்கு கீழ்புறம் ஒழுங்குமுறை விற்பணை கூடமும், தென்புறம் கூடுதல் விதை சுத்திகரிப்பு நிலைய கிடங்கும், மேல்புறம் மற்றும் தென்கிழக்கிலும் நுழைவு வாயில்கள் உள்ளது. வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மேற்கு கிழக்காக வடக்கு பார்த்தாற்போல் வாயிலுடன் அமைந்துள்ளது. வடபுறம் உள்ள நுழைவு வாயிலில் நுழைந்த உடன் அலுவலக அறைகள் மேற்கு கிழக்காக நடுவில் நீண்ட பாதை இடைவெளி இடப்பட்டு அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தின் வடகிழக்கில் முதல் தளத்திற்கு செல்லக்கூடிய மாடிப்படிகள் உள்ளது. இதற்கு மேல்புறம் விதைசான்று அலுவலர்களின் அறை உள்ளது. நுழைவு வாயில் அறைக்கு மேல்புறம் உள்ள கூட்ட அரங்கில் உள்ளே நுழைந்தால் மேல்புறம் கூட்டம் நடத்துவதற்கான அமைப்புடனும், கிழ்புறம் முதல் அறையில் வேளாண்மை அலுவலரின் அறையும், இதற்கு வடபுறம் துணை வேளாண்மை அலுவலரின் அறையும் அமைந்துள்ளது. இந்த கூட்ட அரங்கிற்கு மேல்புறம் வடமேற்கில் ஆத்மா திட்ட அலுவலர்களின் அறையும் உள்ளது. தென் மேற்கில் வேளாண்மை உதவி இயக்குநர் அறையும், இதற்கு கீழ்புறம் தோட்ட கலைத்துறை அலுவலக அறையும், இவற்றிக்கு இடையே தடுப்பு வைத்து கணினி அறையும் அமைந்துள்ளது. தோட்டகலைத்துறை அலுவலகத்தின் கீழ் இளநிலை உதவியாளர் அறையும், அடுத்து ஆவண காப்பக அறையும் அடுத்து கழிப்பறையும் அமைந்துள்ளது. மேற்படி சோதனை ஆரம்பிக்கும் போது வேளாண்மை உதவி இயக்குநர் அறையில் வேளாண்மை உதவி இயக்குநர்,

வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் உயர் அதிகாரிகளின் Google Meeting –ல் இருந்தார்கள். எனவே துணை வேளாண்மை அலுவலர் திரு.மாறன் அவர்களின் அறையிலிருந்து சோதனை ஆரம்பிக்கப்பட்டது. இவரை விசாரிக்க இவர் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய CR 1009 விதை நெல் மற்றும் ADT 5 விதை உளுந்தும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தாமதம் ஆகும் என்றும், அதனால் நாமே வெளியில் விற்பனை செய்து அரசு கணக்கில் செலுத்த வேண்டிய பணத்தை மட்டும் செலுத்திவிட்டு மீதி மானிய தொகையை நாம் எடுத்துக்கொள்வோம் என்றுADA கூறி மேற்படி விதைகளை விற்பனை செய்வதற்கு உரிய ஆட்களை ADA கொண்டுவர சொன்னதின் பேரில் ASO திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆட்களை ஏற்பாடு செய்து கொடுத்தார். அவர்களிடம் மேற்படி விதை நெல்லும், விதை உளுந்தும் விற்கப்பட்டது. திருவிடைமருதுார், வேப்பத்துார், அம்மன்பேட்டையை சேர்ந்த பீட்டர் மற்றும் அவரது மகன் ஜான் என்பவரிடம் 03.12.2021-ந் தேதி 24,500 கிலோ விதை நெல் ரூ.4,36,000/- க்கும், 04.12.2021-ந் தேதி 24,500 கிலோ விதை நெல் ரூ.4,36,000/-க்கும், 07.12.2021-ந் தேதி 9,500 கிலோ விதை நெல் ரூ.1,69,100/-க்கும், 09.12.2021ஆம் தேதி 20640 கிலோ CR1009 விதை நெல்லை ரூ. 367392/-க்கும் விற்று மொத்தம் ரூ.14,08,692/- பெறப்பட்டதாகவும்,மன்னார்குடி விக்னேஷ் த/பெ ரவி என்பவரிடம் 28.11.2021-ந் தேதி 5000 கிலோ விதை உளுந்து விற்று ரூ.3,60,000/- 30.11.2021-ந் தேதி 7027 கிலோ விற்று ரூ.5,06,000/- மொத்தம் ரூ.8,66,000/- பெறப்பட்டதாகவும், இந்த தொகை அனைத்தையும் இன்று வரை வேளாண்மை உதவி இயக்குநரின் பீரோ லாக்கரில் வைத்திருந்ததாகவும், இன்று மதியம் 01.00 மணியளவில் தானும், AAO சிந்து என்பவரும் சேர்ந்து கணக்கு பார்த்து வலங்கைமான் கிடங்கு மேலாளருக்கு ரூ.2,33,578/- தொகையும், ஆலங்குடி மற்றும் அரித்துவாரமங்கலம் கிடங்கு மேலாளருக்கு ரூ.6,18,230/-, 5,48,200/ தொகைகளும், ஆவூர் கிடங்கு மேலாளருக்கு ரூ.7,06,250/- தொகையும் பிரித்து கொடுத்து விட்டதாகவும், தன்னிடம் ரூ.1,68,400/- மட்டும் இருப்பதாக தனது பீரோவில் இருந்து எடுத்து அந்த பணத்தை ஆஜர்செய்தார். இந்த தொகை ரூ.1,68,400/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த பணத்துடன் ஒரு வெள்ளை தாளில் CR 1009(c)-77990X1.70=132583, (F)-1150X4.70=5405=138988, அதன் பின்புறம் உளுந்து பணம் பாக்கி 12027x14=168378, 500x300=150000, 500x10=5000, 200x67=13400 = 168,400 என எழுதப்பட்டிருந்தது. இவ்வாறு எழுதப்பட்டிருந்த வெள்ளை தாள்விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. மேலும் இவருடைய டைரியில் மேற்படி விபரங்களை 08, 09, 10 செப்டம்பர் 2021 பக்கத்தில் எழுதியுள்ளதாக கூறி அதை காண்பித்தார். அதை பார்வையிட்ட பிறகு இவருடைய 2021 வருட இந்த டைரியும் இவரிடமிருந்து விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது. இதன்பேரில் சம்மந்தப்பட்ட கிடங்கு மேலாளர்கள் குறித்து விசாரித்த போது வலங்கைமான் கிடங்கானது இந்த அலுவலகத்தில் வடகிழக்கு பகுதியில் தனி கட்டிடத்தில் உள்ளதாகவும், அங்கு வலங்கைமான் வேளாண்மை விரிவாக்க மைய கண்காணிப்பாளர் திருமதி.சாந்தி

அவர்கள் உள்ளதாகவும், மற்ற கிடங்கு மேலாளர்கள் திரு.சண்முகம் மற்றும் திரு.தியாகராஜன் வீட்டிற்கு சென்றுவிட்டதாக DAO மாறன் தெரிவித்தார். அப்போது ஆலங்குடி மற்றும் அரித்துவாரமங்கலம் கிடங்கு மேலாளர் திரு.சண்முகம் உணவு இடைவேளை முடித்து அலுவலகத்திற்குள் வந்தார். இவரை விசாரிக்க இவரிடம் DAO மாறன் கொடுத்த பணத்தை பையுடன் தனது வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டதாகவும், தனது வீடு வலங்கைமான், விருப்பாச்சிபுரத்தில் உள்ளதாகவும், வீட்டிற்கு சென்று DAO கொடுத்த பணத்தை எடுத்து வருவதாக கூறினார். அதனால் ஆய்வாளர் திருமதி.G.R.சித்ரா அவர்களை இவருடன் செல்வதற்கும் மேலும் ஆவூர் கிடங்கிற்கு சென்று, ஆவூர் கிடங்கு மேலாளரை அழைத்துவரும் பணிக்கு நியமிக்கப்பட்டது. விதை உதவி அலுவலர்களின் அறையில் இருந்த **திரு.கோபாலகிருஷ்ணன் வேளாண்மை உதவி விதை அலுவலர்** அவர்களை சோதனையிட இவரிடம் ரூ.11,500/- இருந்தது. இதற்கு இவரது செல்போனில் நேற்று ரூ.10,000/- வங்கியிலிருந்து பணம் எடுத்தற்கான குறுந்தகவல் இருந்ததை காண்பித்ததாலும், மீதி தொகை ரூ.1,500/- தனது செலவிற்காக வீட்டில் இருந்து எடுத்து வந்த பணம் என்று கூறியதால் இந்த ரூ.11,500/- தொகை இவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.இவர் ஆஜர்படுத்திய விதை பண்ணை பதிவேடு 2021-21, 2021-22 மற்றும் கொள்முதல் பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலக அறையில் இருந்த **உதவி வேளாண்மை அலுவலர் செல்வி.V.சிந்து** அவர்களை விசாரிக்க அவரிடம் பணம் எதுவும் இல்லை. ஆனால் DAO திரு.மாறன் அவர்கள் கூறியபடியே இவரும், மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய CR 1009 விதை நெல் மற்றும் ADT 5 விதை உளுந்தும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தாமதம் ஆகும் என்றும், அதனால் நாமே விற்பனை செய்து அரசு கணக்கில் செலுத்த வேண்டிய பணத்தை மட்டும் செலுத்திவிட்டு மீதி மானிய தொகையை நாம் எடுத்துக்கொள்வோம் என்று ADA திரு.பாலசுப்ரமணியன் கூறியதாகவும் மேற்படி விதைகளை விற்பனை செய்வதற்கு உரிய ஆட்களை ADA கொண்டுவர சொன்னதின் பேரில் ASO திரு.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆட்களை ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றும், அவர்களிடம் மேற்படி விதை நெல்லும், விதை உளுந்தும் விற்கப்பட்டது என்றும் கூறினார். மேலும் திருவிடைமருதூர், வேப்பத்தூர், அம்மன்பேட்டையை சேர்ந்த பீட்டர் மற்றும் அவரது மகன் ஜான் என்பவரிடம் 03.12.2021-ந் தேதி 24,500 கிலோ விதை நெல் ரூ.4,36,000/- க்கும், 04.12.2021-ந் தேதி 24,500 கிலோ விதை நெல் ரூ.4,36,000/-க்கும், 07.12.2021-ந் தேதி 9,500 கிலோ விதை நெல் ரூ.1,69,100/-க்கும், 09.12.2021ஆம் தேதி 20640 கிலோ CR1009 விதை நெல்லை ரூ. 367392/-க்கும் விற்று மொத்தம் ரூ.14,08,692/- பெறப்பட்டதாகவும்,மன்னார்குடி விக்னேஷ் த/பெ ரவி என்பவரிடம் 28.11.2021-ந் தேதி 5000 கிலோ விதை உளுந்து விற்று ரூ.3,60,000/- 30.11.2021-ந் தேதி 7027 கிலோ விற்று ரூ.5,06,000/- மொத்தம் ரூ.8,66,000/- பெறப்பட்டதாகவும், இந்த தொகை அனைத்தையும் இன்று வரை வேளாண்மை உதவி இயக்குநரின் பீரோ லாக்கரில் வைத்திருந்ததாகவும், இன்று மதியம் 01.00 மணியளவில் தானும், DAO மாறன் அவர்களுடன் சேர்ந்து கணக்கு

பார்த்ததாகவும், DAO மாறன், வலங்கைமான் கிடங்கு மேலாளருக்கு ரூ.2,33,578/- தொகையும், ஆலங்குடி மற்றும் அரித்துவாரமங்கலம் கிடங்கு மேலாளருக்கு ரூ.6,18,230/-, 5,48,200/- தொகைகளும், ஆவூர் கிடங்கு மேலாளருக்கு ரூ.7,06,250/- தொகையும் பிரித்து கொடுத்து விட்டதாகவும், ரூ.1,68,400/- தொகை மட்டும்DAO மாறனிடம் இருப்பதாக கூறினார். மேலும் இவரும் DAO மாறனும் இதற்குரிய விபரங்களை தங்களது நோட்புக் மற்றும் டைரியில் குறித்து வைத்திருப்பதாக கூறி தனது நோட்டு புத்தகத்தை எடுத்து அதில் பக்கம் எண்.25ல் உளுந்து சம்மந்தப்பட்ட விபரங்களை DAO சொல்லி எழுதியதாக எடுத்து காண்பித்தார். இந்த நோட்டு புத்தகம் இவரிடமிருந்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. வலங்கைமான் கிடங்கு அலுவலகத்தினை சோதனையிடப்பட்டது. இங்கு திருமதி.சாந்தி கண்காணிப்பாளர் பணியிலிருந்தார். இவர் இவரது அலுவலக பீரோவிலிருந்து ரூ. 2,33,600/- தொகையை எடுத்து ஆஜர்படுத்தினார். இந்த தொகையை மதியம் DAO திரு.மாறன் அவர்கள் கொடுத்ததாகவும், அந்த பணத்துடன் மாறன் அவர்கள் தொகைக்கான விபரம் உள்ள சீட்டு கொடுத்ததாகவும் கூறி மேற்படி தொகைக்குள் இருந்த சீட்டினை எடுத்து காண்பித்தார். அதில் வலங்கைமான் AEC – 1) உளுந்து ADT – 5 (C) 2327 x 58 = 134966, 2) நெல் CRI009 SUB (c) 499 CR1009 Sub-1 = 5540 , 5540x17.80=98612 = 233578, 2000x1 = 2000, 500x400=200000, 200x100= 20,000, 500x23= 11500, 100x1=100 = 2,33,600, பாக்கி 233600 , 233578= 22 என எழுதப்பட்டிருந்தது. இதற்கு தகுந்தவாறு பில் போடவேண்டும் என காலை நடந்த கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார் என்றும், மேற்படி நெல் இருப்பு ஏற்கனவே வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு அனுப்பப்பட்டதாக கணக்கில் உள்ளதாகவும் தெரிவித்தார். இவர் ஆஜர்படுத்திய மேற்படி தொகை 2,33,600/- மற்றும் அதனுடன் மேற்படி விபரங்கள் எழுதப்பட்டிருந்த வெள்ளை தாள் இவரது 1) கிடங்கு இருப்பு பதிவேடு மற்றும் 2) டெலிவரி செலான் கோப்பு, 3) AEC வலங்கைமான் 2021-22 ST Bill Incoming ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சோதனையின் போது பணி நியமிக்கப்பட்டபடி மாலை 6.45 மணியளவில் ஆலங்குடி மற்றும் அரித்துவாரமங்கலம் கிடங்கு மேலாளர் திரு.சண்முகம் மற்றும் ஆவூர் கிடங்கு மேலாளர் திரு.தியாகராஜன் ஆகியோருடன் ஆய்வாளர் திருமதி.சித்ரா அவர்கள் ஆஜரானார். ஆலங்குடி மற்றும் அரித்துவாரமங்கலம் கிடங்கு மேலாளர் திரு.சண்முகம் அவர்கள் RTS Pyro Park என எழுதப்பட்டிருந்த பணம் உள்ள வெள்ளை கலர் பையும், GRT Jewallers என்று எழுதப்பட்டிருந்த பணம் உள்ள வெள்ளை கலர் பையையும் ஆஜர்படுத்தினார். RTS Pyro Park என்ற எழுதப்பட்டிருந்த பையில் ரூ.6,18,200/- இருந்தது. இதனுடன் இருந்த வெள்ளை தாளில் ஆலங்குடி AEC 1) ADT-5 உளுந்து 3800 x 58 = 2,20,400/-, 2) நெல் CR 1009 Sub-1 (C), SPU 16650 AEC 5700 = 22350 } 22350 x 17.80 = 3,97830 = 6,18,230, 500x1200=6,00000, 2000x9 = 18000, 200x1 = 200 = 618200 என எழுதப்பட்டிருந்தது. GRT Jewallers என்று எழுதப்பட்டிருந்த பையில்

ரூ.5,48,200 இருந்தது. இதனுடன் இருந்த வெள்ளை தாளில் அரித்துவாரமங்கலம் AEC 1) உளுந்து ADT-5 2700 x 58 = 1,56,600/-, 2) நெல் CR 1009 Sub-1 (C), SPU 21200 AEC 800 = 22000 } 22000 x 17.80 = 3,91,600 = 548200, 2000x220=4,40,000-, 500x200=1,00,000, 500x16 = 8000, 200x1 = 200 = 5,48,200 என எழுதப்பட்டிருந்தது. மேற்படி தொகைகள் ரூ.6,18,200/- மற்றும் 5,48,200 இந்த தொகையுடன் விபரங்கள் எழுதப்பட்டிருந்த இரண்டு வெள்ளை தாள்கள் மற்றும் RTS Pyro Park என எழுதப்பட்டிருந்த மற்றும் GRT Jewallers என்று எழுதப்பட்டிருந்த இரண்டு வெள்ளை கலர் பைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. ஆவூர் கிடங்கு மேலாளர் பொறுப்பு திரு.தியாகராஜன் அவர்கள் தன்னிடம் இருந்து தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை விதை பையினுள் இருந்த பணத்தை ஆஜர்படுத்தினார். அதை சோதனையிட அதில் ரூ.7,06,250/- தொகை இருந்தது. இந்த தொகையுடன் இருந்த பாதி வெள்ளை தாளில் ஆவூர் AEC 1) உளுந்து ADT-5 3200 x 58 = 1,85,600/-, 2) நெல் CR 1009 Sub-1 (C), SPU 20650 AEC 8600 = 29250 } 29250 x 17.80 = 706250, 500x1400=700000-, 200x31=6200, 50x1 = 50 = 7,06,250 என எழுதப்பட்டிருந்தது. இவர் ஆஜர்படுத்திய தொகை ரூ. 7,06,250 மற்றும் அதனுடன் இருந்த பணம் குறித்த குறிப்பு இருந்த வெள்ளை தாள்கள் மற்றும் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை வெள்ளை நிற விதை பையையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மாலை 06.00 மணியளவில் Google Meeting முடிவடைந்து விட்டதால் வேளாண்மை உதவி இயக்குநர் திரு.பாலசுப்ரமணியன் அலுவலக அறையில் சோதனை ஆரம்பிக்கப்பட்டது. இவரது அறையில் இவர் மற்றும் வேளாண்மை அலுவலர் திருமதி.கோமதி, திரு.செந்தில்குமார், வேளாண்மை உதவி அலுவலர், வலங்கைமான், திரு.மோகன்ராஜ், , வேளாண்மை உதவி அலுவலர், கொட்டையூர், திரு.மாணிக்கவாசகம், வேளாண்மை உதவி அலுவலர், ஆலங்குடி, திரு.இளையராஜா வேளாண்மை உதவி அலுவலர், ஆவூர், திரு.அண்ணாதுரை, வேளாண்மை உதவி அலுவலர், ஊத்துக்காடு ஆகியோர் இருந்தனர். திரு.பாலசுப்ரமணியன் ADA அவர்களை விசாரிக்க இவர் விதை நெல், விதை உளுந்து ஆகியவை விவசாயிகளுக்கு விற்காமல் போய்விட்டால் நஷ்டம் ஏற்படுவதாகவும், அந்த நஷ்டத்தை தவிர்பதற்காகதான் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கவேண்டிய 79140 கிலோ விதை நெல் CR 1009 மற்றும் 12027 விதை உளுந்து ADT – 5 ஆகியவற்றை வெளி வியாபாரிகளுக்கு விற்றதாகவும், அதில் அந்த தொகையைதான் DAO மாறன் கிடங்கு மேலாளருக்கு பிரித்து கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். வெளி வியாபாரிகளை ASO திரு.கோபாலகிருஷ்ணன் மூலம் ஏற்பாடு செய்ததாகவும் இதுசம்மந்ததாக வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் கிடங்கு மேலாளர் அவர்களுடன் காலையிலேயே கூட்டம் நடத்தி தக்க அறிவுரை கொடுத்துவிட்டதாகவும் தெரிவித்தார். இவரிடமிருந்து இவருடைய Majestic Note புத்தகம் மற்றும் 2021-22 வாரந்திர ஆய்வு கூட்ட பதிவேடு ஆகியவை கைப்பற்றப்பட்டது. வேளாண்மை அலுவலர்திருமதி.கோமதி அவர்களை விசாரிக்கADA திரு.பாலசுப்பரமணியன் அவர்கள் கூறியதால்தான் தானும், உதவி வேளாண்மை

அலுவலர்களும், விதை உளுந்து சம்மந்தமாக போலியாக பில்கள் தயார் செய்ய ஒத்துக்கொண்டும், கிடங்கு மேலாளர்கள் பில் போடுவதற்கு உரிய பணத்தை DAO மாறனிடம் வாங்கி சென்றதாகவும், விற்கப்பட்ட மானிய விதை நெல் CR 1009 தொடர்பாக ஏற்கனவே ADA அலுவலக விதை சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அந்தந்த வேளாண்மை விரிவாக்க மைய கிடங்கிற்கு பெயரளவில் பொய்யாக விதை நெல் வழங்கப்பட்டுள்ளதாக ஆவணங்களில் பதிவு செய்துள்ளதாகவும், இவற்றை பெற்றுள்ளதாக அந்தந்த வேளாண்மை விரிவாக்க மைய கிடங்கில் ஆவணங்களில் பதிவு செய்துள்ளதாகவும் கூறினார். மேலும் DAO மாறன் மற்றும் AAO சிந்து கூறியுள்ள அதே தேதிகளில் விதை சுத்தகரிப்பு நிலையத்திலிருந்து வெளி வியாபாரிகளுக்கு விதை நெல்லும், விதை உளுந்தும் அனுப்பப்பட்டதும், அதுதொடர்பாக தொகை பெறப்பட்டதும் தனக்கு தெரியும் என்றும் தெரிவித்தார். **திரு.செந்தில்குமார்**, வேளாண்மை உதவி அலுவலர், வலங்கைமான், **திரு.மோகன்ராஜ்**, , வேளாண்மை உதவி அலுவலர், கொட்டையூர், **திரு.மாணிக்கவாசகம்**, வேளாண்மை உதவி அலுவலர், ஆலங்குடி, **திரு.இளையராஜா** வேளாண்மை உதவி அலுவலர், ஆவூர், **திரு.அண்ணாதுரை**, வேளாண்மை உதவி அலுவலர், ஊத்துக்காடு ஆகியோரை சோதனையிட்ட போது இவர்களிடம் பணம் எதுவும் இல்லை. CR 1009 விதை நெல் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக பெறப்பட்டதில் தங்களுக்கு மானியத்தில் விற்பனை செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த விதை நெல் தங்களுடை கிடங்கில் பெறப்படவில்லை என்றும், அவை வலங்கைமான் விதை சுத்திகரிப்பு நிலையத்திலேயேதான் வைக்கப்பட்டிருந்தது எனவும் அதேபோல் ADT-5 மானிய விதை உளுந்தும் விரிவாக்க மைய கணக்கில் வரவு வைக்கப்பட்டுளதா என்பது குறித்து கிடங்கு மேலாளர்களுக்குதான் தெரியும் என்று தெரிவித்தார்கள். ADA அலுவலக அறைக்கு வடமேற்கு பதியில் உள்ள ஆத்மா திட்ட அலுவலக அறையில் சோதனை செய்யப்பட்டது. இந்த அறையில் **திரு.விக்னேஷ், பிளாக் டெக்னாலஜி மேனேஜர்**, வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், என்பவரும் இவருடைய உதவியாளர்கள் திரு.சதீஸ்குமார் மற்றும் பிரியங்கா ஆகியோர்கள் இருந்தார்கள். திரு.விக்னேஷ் அவர்கள், தன்னிடம் ரூ.2,00,000/- உள்ளதாக பீரோவில் இருந்து எடுத்து ஆஜர்செய்தார். மேலும் சொந்தபணம் ரூ.3,200/- தன்னுடை சொந்த பணம் என்று தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். ரூ.2,00,000/- குறித்து விசாரிக்க இதில் ரூ.1,20,000/- மாநில அளவிளான விவசாயிகள் பயிற்சி 3 நாட்களுக்கு வழங்குவதற்காக IOB வங்கி கணக்கு 119701000025673 இருந்து 07.12.2021-ந் தேதி எடுத்ததாகவும், 09.12.2021-ந் தேதி நடைபெற இருந்த பயிற்சி ரத்தாகிவிட்டதாகவும், அதனால் அந்த பணம் கணக்கில் உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் 02.12.2021-ந் தேதி C.B மற்றும் கிசான் கோத்தீஸ் திட்டத்திற்காக ரூ.40,000/- எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அதனால் ரூ.1,60,000/- மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இதற்கான வங்கி கணக்கு புத்தகமும் செக் புத்தகமும் பார்வையிடப்பட்டது. மீதி தொகை ரூ.40,000/- குறித்து சரியான விளக்கம் கூறாததால் இந்த தொயையும், 1) IOB வங்கி கணக்கு

119701000025673 புத்தகம் மற்றும் 2) செக் புத்தகம், 3) Cheque Issue Register, 4) Cahs book, 5) உழவன் நண்பன் பதிவேடு, 6) உழவன் நண்பன் contingence fund for farmer friend கோப்பு, 7) செயல்விளக்க பயனாளிகள் பதிவேடு-IInstallment, 8) செயல்விளக்க பயனாளிகள் பதிவேடு-II& III Installmentஆகியவை இவரிடமிருந்து கைப்பபற்றப்பட்டது. இவருக்கு கீழ் பணிபுரியும் சதீஸ்குமார் மற்றும் பிரியங்கா ஆகியோர்களை விசாரிக்க இவர்கள் மாநில அளவிலான விவசாயிகள் பயிற்சி மற்றும் C.B மற்றும் கிசான் கோத்தீஸ் திட்டத்திற்கு எடுக்கப்பட்ட பணம் மட்டும் இன்னும் செலவு செய்யாமல் உள்ளதாக தெரிவித்தார்கள். செல்வி.கவிதா த/பெ ஜானகிராமன், இளநிலை உதவியாளர்,, செல்வி. தீபா, த/பெ விஸ்வநாதன், டேட்டா என்ட்டரி ஆப்பரேட்டர், திருமதி.இசக்கியம்மாள், க/பெ குணசீலன், பயிர் அறுவடை பரிசோதனையாளர், திரு.நவீன்குமார், த/பெ செல்வமணி, பயிர் அறுவடை பரிசோதனையாளர், திரு.தமிழரசன், த/பெ தங்கமணி, இரவு காவலர், திரு.வினோத்மார்கோ, த/பெ ராதா, பயிர் அறுவடை பரிசோதனையாளர், திரு.பிரபு, த/பெ இராதாகிருஷ்ணன், விதைச்சான்று அலுவலர், செல்வி.அனுசியா, த/பெ காசிநாதன், பயிர் அறுவடை பரிசோதனையாளர், திரு.அறிவுமணி, த/பெ குமரன், இரவு காவலர், பயிர் அறுவடை பரிசோதனையாளர், திரு.பாலமுருகன், த/பெ பூவான், உதவி தோட்டக்கலை அலுவலர், பயிர் அறுவடை பரிசோதனையாளர் ஆகியோரை சோதனையிட்ட போது இவர்கள் யாரிடமும் பணம் எதுவும் இல்லை. மேற்படி சோதனையின் போது கைப்பற்றப்பட்ட தொகை மற்றும் ஆவணங்கள் விபரம்

| வ. எண் | அலுவலர்கள் | தோகை ரு. | ஆவணங்கள் |
|---|---|---|---|
| 1. | ADA திரு.பாலசுப்ரமணியன் | 0 | 1) Majestic Note புத்தகம்<br>2) 2021-22 வாரந்திர ஆய்வு கூட்ட பதிவேடு |
| 2. | DAO மாறன் | 168400 | 1) பணம் விபரம் எழுதப்பட்டுள்ள வெள்ளை நிற தாள்,<br>2) 2021 டைரி |
| 3. | AO கோமதி | 0 | 1) விதை சத்தி பதிவேடு தொகுதி IV2021-22,<br>2) CR 1009 விதை நெல் 30421 வலங்கைமான், ஆவூர், ஆலங்குடி டெலிவரி நோட்<br>3) Store Transfer Bill, வெளி செல்வன, உள்வருவன<br>4) வருகை பதிவேடு ADA அலுவலகம்,<br>5) வருகை பதிவேடு Atma,<br>6) வருகை பதிவேடு பயிர் அறுவடை பரிசோதனை பணியாளர்கள் |
| 4. | AAO V.சிந்து | 0 | 1) நோட் புக் |

| | | | |
|---|---|---|---|
| 5. | ASO<br>கோபாலகிருஷ்ணன் | 0 | 1) விதை பண்ணை பதிவேடு 2020-21, 2021-22<br>2) கொள்முதல் பதிவேடு |
| 5. | கண்காணிப்பாளர்<br>திருமதி.சாந்தி | 233600 | 1) Stock Register<br>2) பணம் விபரம் எழுதப்பட்டுள்ள வெள்ளை நிற தாள்,<br>3) Delivery Chellanfile<br>4) AEC வலங்கைமான் 2021-22 ST Bill Incoming |
| 6. | கிடங்குமேலாளர்<br>திரு.சண்முகம் | 1166400 | 1) பணம் விபரம் எழுதப்பட்டுள்ள வெள்ளை நிற தாள் - 2<br>2) RTS Pyro Park என எழுதப்பட்டிருந்த வெள்ளை நிற பை.<br>3) GRT Jewallers என எழுதப்பட்டிருந்த வெள்ளை நிற பை. |
| 7. | கிடங்குமேலாளர்<br>திரு.தியாகராஜன் | 706250 | 1) தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை வெள்ளை நிற விதை பை<br>2) பணம் விபரம் எழுதப்பட்டுள்ள வெள்ளை நிற தாள் |
| 8. | திரு.விக்னேஷ்,<br>பிளாக் டெக்னாலஜி மேனேஜர், | 40000 | 1)IOB வங்கி கணக்கு 119701000025673 புத்தகம் மற்றும்<br>2) செக் புத்தகம்,<br>3) Cheque Issue Register,<br>4) Cahs book,<br>5) உழவன் நண்பன் பதிவேடு,<br>6) உழவன் நண்பன் contingence fund for farmer friend கோப்பு,<br>7) செயல்விளக்க பயனாளிகள் பதிவேடு-I Installment,<br>8) செயல்விளக்க பயனாளிகள் பதிவேடு-II & III Installment |
| | | 2314650 | |

மேற்படி திடீர் சோதனை இன்று 10.11.2021-ந் தேதி 22.00 மணி முடிக்கப்பட்டது. வீடு சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 10.12.2021-ந் தேதி திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் தாலுக்கா, வலங்கைமான் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் 15.30 முதல் 22.00 மணிவரை மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையை தொடர்ந்து கிடைக்கப்பெற்ற தகவல்படி வலங்கைமான் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குனர் திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 1415-A ஆர்ச் மெயின் ரோடு, பெரியார் நகர், சாக்கோட்டை, கும்பகோணம் முகவரியில் உள்ள வீட்டை 1)R.ராமச்சந்திரன், மாவட்ட துணைஆய்வு குழு அலுவலர் தஞ்சாவூர் 2) .ஜெகதீசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர்/ஆய்வுக்குழு ஆய்வாளர், தஞ்சாவூர் மற்றும் திருமதி.இரா.தமிழ்ச்செல்வி காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

பிரிவு, திருவாரூர் ஆகியோர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட வீடு சோதனை நடவடிக்கை விபரம். இந்த வீடு சோதனை இன்று 10.12.2021-ந் தேதி 22.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. ADA திரு.பாலசுப்பிரமணியன் அவர்களின் வீடு கும்பகோணம் சாக்கோட்டையில் பெரியார் நகரில் ஆர்ச் மெயின் ரோட்டில், எண். 1415-A-ல் வடக்கு பார்த்த வாசலுடன் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் அமைந்துள்ளது. வீட்டின் முன்புறம் உள்ள போர்டிகோவில்TN 68 AA 7974 என்ற Toyoto Glanza காரும், TN 82 A 1127, TN 68 M 4226, TN 68 B 6342 ஆகிய மூன்று இருசக்கர வாகனங்களும் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த வீட்டின் மின் இணைப்பு எண் 4920011374 ஆக இருந்தது. வீட்டின் முன்புறம் நுழைவு வாயில் அருகே சிறிய வராண்டாவும், அதற்கு அடுத்து நடு ஹாலும் உள்ளது. இந்த வீடு சோதனை போது வீட்டின் உரிமையாளரான திரு.பாலசுப்ரமணியன், இவரது மனைவி திருமதி.ராஜலெட்சுமி, மகள்கள் திவ்யா மற்றும் நித்யா ஆகியோர்கள் ஆஜரிலிருந்தார்கள். வீட்டின் ஹாலில் சோபா செட், Sony TV மற்றும் சோக்கேஸ் ஆகியவை உள்ளது. இந்த ஹாலுக்கு மேல்புறம் இரண்டு படுக்கை அறை உள்ளது. இதில் வடபுறம் உள்ள படுக்கை அறையில் சோதனை செய்யப்பட்டது. இந்த அறையில் Steel பீரோ ஒன்றும், இதற்கு அடுத்து மரத்தினாலான பீரோ ஒன்றும் இருந்தது. இதில் நடு தட்டில் சோதனை செய்தபோது இரண்டு வெள்ளை கவர்களுக்குள் பணத்துடனும், இதன் அருகில் பணக்கட்டு பேப்பர் சுற்றி வைக்கப்பட்ட நிலையில் இருந்தது. சோதனையிட்ட போது ஒரு வெள்ளை கவரில் முன்பக்கம் **To AO**என பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. அந்த கவருக்குள் 18 ஐநூறு ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.9,000/- தொகை இருந்தது. இன்னொரு வெள்ளை கவரில் முன்பக்கம் **To Dy AO**என பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. அந்த கவருக்குள் 40 ஐநூறு ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ரூ.20,000/- இருந்தது. பேப்பரில் சுற்றி வைக்கப்பட்டிருந்த தொகையில் பேப்பரை பிரித்து பார்த்த போது அதில் முழுவெள்ளை தாளில் மற்றும் அரைதாளில் பணவிபரங்கள் எழுதப்பட்டிருந்தது. அதில் 12 இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள், 72 ஐநூறு ரூபாய் நோட்டுகள் ஆக மொத்தம் ரூ.60,000/- இருந்தது. மேலும் வரவு செலவு குறிப்பு உள்ள கையேடு இரண்டு (03.07.2016 முதல் 06.12.2021) (23.01.2018 முதல் 19.09.2018) இருந்தது இந்த தொகை ரூ.89,000/- கைப்பற்றப்பட்டது. அடுத்ததாக இந்த படுக்கை அறைக்கு தென்புறம் உள்ள படுக்கை அறையை சோதனை செய்தபோது இதில் இருந்த பீரோவையும் சோதனை செய்த போது அதில் ரூ.57,680/- தொகை இருந்தது இதுகுறித்து விசாரித்த போது ADA திரு.பாலசுப்ரமணியன் மனைவி ராஜலெட்சுமி அவர்களின் அறை இது என்றும், இவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும் கூறினார். அந்த தொழில் தொடர்பாக பெறப்பட்ட தொகை என்றும் திருமதி.ராஜலெட்சுமி அவர்களின் வங்கி புத்தகம் மற்றும் வருமான பதிவு சான்று ஆகியவற்றை ஆஜர்படுத்தினார். எனவே இந்த தொகை ரூ.57,680/- திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் இவரது அறையில் சோதனை செய்த போது கீழ்கண்ட ஆவணங்கள் இருந்தது: 1. பதிவுசெய்யாத கடன் பத்திரம் - T.தட்சிணாமூர்த்தி, த/பெ தங்கவேல் பிள்ளை, சிவன்கோவில் தெரு, உத்திரகுடி, அங்கராய நல்லூர், ஜெயங்கொண்டம்,

அரியலூர் அவர்களுக்கு தனராஜ் ஆரியங்கரை சாக்கோட்டை அவர்கள் எழுதி கொடுத்த கடன் படி 1.10.2015 ரூ.1,50,000/- இத்துடன், ரூ.1,50,000 மற்றும் ரூ.1,00,000க்கு பிராமிசரி நோட்டுகள் உள்ளது. அதில் 1,00,000 பிராமிசரி பின்புறம் 04.02.2017 ரூ.1,00,000/- எனவும் 30.08.2018 முடிய வட்டி எனவும் எழுதப்பட்டுள்ளது. 2. கத்த கிரய சாசனம் 206/2021 DR/KKM– ஜெயபிரகாஷ் என்பவருக்கு விஸ்வநாதன் எழுதி கொடுத்தது ரூ.2,41,500/- இடம்:பலவாத்தான் கட்டளை ம KKM (TR)புல எண் 91/2A, 91/3- 3. Doc – 1822/2000 – DR/KKM J.I இணை சார்பதிவாளர், கும்பகோணம். 4. Doc – 1772/1999 – DR/KKM J.I இணை சார்பதிவாளர், கும்பகோணம். 5. Doc – 1171/1999 – DR/KKM J.I இணை சார்பதிவாளர், கும்பகோணம். 6. Doc – 2430/2000 – DR/KKM J.I இணை சார்பதிவாளர், கும்பகோணம். 7. Doc – 222/2004 – DR/KKM J.I இணை சார்பதிவாளர், கும்பகோணம். 8. Doc – 1397 /2004 – DR/KKM J.I இணை சார்பதிவாளர், கும்பகோணம். 9. Doc – 1223/2021 கிரய பத்திரம் எழுதி கொடுத்தவர் ராஜலட்சுமி ரூ.7,58,000 (மதிப்பு) கருப்பூர் 138/3A1, 138/4 புல எண், நாச்சியார் கோவில் (SRO). 10. பொது அதிகார ஆவணம் 58/01-107/2011- SRO,நாச்சியார்கோவில், சாக்கோட்டை கூட்டுறவு நகர் 104 Plot, (89/1,93 புல எண்) 11. 2349/2019 ஆவண ரசீது –SRO நாச்சியார்கோவில், கும்பகோணம் கருப்பூர்ஊராட்சி, சாக்கோட்டை – Plot Map. 12. கிரய பத்திரம் 721/11/07/2011 - SRO நாச்சியார்கோவில் ரூ.2,34,000/- சாக்கோட்டை – 89/1,93. 13. பொது அதிகார ஆவணம் - 1709/2019 SRO நாச்சியார்கோவில் ராஜலட்சுமி அவர்களுக்கு பிரதிப எழுதி கொடுத்தது – சாக்கோட்டை கூட்டுறவு நகர் - புல 89/1, 89/1A. 14. SBI, (Kumbakonam -864) A/c 30396339436 of Balasubramaniam (Rs.2,92,640/- on 02.11.2021) 15. IOB Joint Account No.282801000000304- சாக்கோட்டை (01.08.2017), 16. SBI, Kumbakonam Bazaar – Rajalakshmi 32890560855. 17.ICICI , Balasubramaniam – 608101077255. 18.Andra Bank Joint Account NO.184410100003068. 19. இரண்டு லாக்கர்கள் Union Bank ல் தொடங்கப்பட்டு , (020015) 16.08.2012ல் ரூ.25,000/-(எண் 28) மற்றும் (020489) 30.05.2015ல் ரூ.25,000/- வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. இந்த வங்கி கணக்கின் கடைசி entry15.11.2021 கடைசி நிலுவைத் தொகை - ரூ.22,790/-. 20. இந்தியன் வங்கி, கும்பகோணம் முதன்மை கிளை வங்கியில் திருமதி.ராஜலட்சுமி அவர்களின் கணக்கு எண்-6588661162, (கடைசி entry- 07.11.2018), 21.திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் சிண்டிகேட் வங்கி கணக்கு எண்- 63412200022996 (கடைசி entry : 23.6.2019) 22. திருமதி.ராஜலட்சுமி என்பவருக்கு வேலுச்சாமி எழுதிக் கொடுத்த கடன் பத்திரம் ரூ.1,25,000/- நாள்.07.04.2016. 23. பேங்க் ஆப் பரோடா (CBS– 15.10.2019) வங்கி கணக்கு எண்- 33410100000822 ரூ.8,000/-. 24. வாகனம எண். TN 01 T 9938 Wagon R (Rs.1,05,000/-). 25. இதா ஆவணம் - 3598/2010 – 22.07.2010 ராஜலட்சுமி அவர்களுக்கு DR/கும்பகோணம். 26. ஆவணம் -2776/1955 – 06.11.2015 - DR/கும்பகோணம். 27. LIC HFL Loan Account No. 21025506406. 28. Doc .2138 /2006 - இராஜேஸ்வரி வீட்டு பத்திரம்,DR/கும்பகோணம். 29. ரூ.12,84,000/-. மதிப்பிலானகிரய பத்திரம், முதல் நபர் B.ராஜேஸ்வரி – பெரியார் நகர், Plot .55, கும்பகோணம் தாலுக்கா, அண்ணலக்ரகாரம் வட்டம், 30. சாந்தி அவர்களுக்கு கிரய சாசனம் - ரூ.36991/- 31. 23.05.2013 முதல் 2014 வரையிலான நகை அடகு ரசீது மதிப்பு ரூ.3,00,000/- (15 தங்க நாணயங்கள்) 32. ஐந்து தங்க நாணயங்கள் (40 கிராம்) ரூ.1,08,100/- க்கு ஆசிகா தங்க நகை மாளிகை, கும்பகோணத்தில் வாங்கிய ரசீது தேதி 09.02.2012. 33. ரூ.3,14,000/- மதிப்பிலான வெள்ளி ஆசிகா தங்க நகை மாளிகை, கும்பகோணத்தில் வாங்கிய ரசீது தேதி 30.05.2015. 34. திருமதி.ராஜலெட்சுமி அவர்களின் பாரத ஸ்டேட் பேங்க்A/C. 357335011090.

முதன்மை கிளை, கும்பகோணத்தின் 27.04.2016 முதல் 31.1.0.2016 வரையிலான வங்கி அறிக்கை. 35. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கடன் ரசீது எண்.J32028003807 (ரூ.52,000). 36. Dr.திவ்யா 2013-2019 வரை திருச்சி SRM மருத்துவ கல்லூரியில் இளங்கலை மருத்துவம் பயின்றுள்ளார். 37. B. நித்யா, A/C. NO 40416041834, 2014 -2018 வரை B.Tech (CSE) சாஸ்த்ரா பல்கலைக்கழகம், கும்பகோணத்தில் பயின்றுள்ளார். 38. ரூ.31,500/- க்கு ஆசிகா தங்க மாளிகை, கும்பகோணத்தில் மோதிரம் வாங்கியதற்கான ரசீது நாள்.26.04.2012. 39. ரூ.18,900/- க்கு ஆசிகா தங்க மாளிகை, கும்பகோணத்தில் Chain வாங்கியதற்கான ரசீது நாள்.13.05.2011. 40. ரூ.10,500/- க்கு ஆசிகா தங்க மாளிகை, கும்பகோணத்தில் தோடு வாங்கியதற்கான ரசீது நாள்.12.01.2013. 41. ரூ.8,48,250/- க்கு ஆசிகா தங்க மாளிகை, கும்பகோணத்தில் தங்க நாணயங்கள் (50) வாங்கியதற்கான ரசீது நாள்.07.05.2011. 42. TN68 R 8412Celero Carக்கான மே 2018 முதல் மே 2019 வரையிலான கார் இன்சூரன்ஸ் ரூ.9,534 (பாலிசி எண்.78099661). 43. 09/16 Abstract Estimate (7,53,000.00/-) 44. ரூ.35,65,000/- க்கான மதிப்பீட்டு அறிக்கை 08.12.2016. 45. Doc 601/2015 - SRO நாச்சியார்கோவில். 46. திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2021 – 2022 ஆண்டுக்கான வருமான வரி ரூ.1,83,414/- (ஆண்டு ஊதியம் : ரூ15.12,682/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P.47.திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2020 – 2022 ஆண்டுக்கான வருமான வரி ரூ.2,16,743/- (ஆண்டு ஊதியம் : ரூ.14,85,520/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P.48. திருமதி.ராஜலட்சுமி அவர்களின் 2019-2020 ஆண்டுக்கான வருமான வரி ரூ.2,488/- (ஆண்டு ஊதியம் : ரூ3,27,400/-). 49. திருமதி.ராஜலட்சுமி அவர்களின் 2020 - 21 ஆண்டுக்கான வருமான வரி ரூ.1,000/- (ஆண்டு ஊதியம் : ரூ4,50,000/-). 50. திரு.பாலசுப்பிரமணியன், அவர்களின் 2020 - 21 ஆண்டுக்கான வருமான வரி ரூ.2,20,903/- (ஆண்டு ஊதியம் : ரூ 18,53,466/-). 51. திரு.பாலசுப்பிரமணியன், அவர்களின் 2020 - 21 ஆண்டுக்கான வருமான வரி ரூ.20,190/- (ஆண்டு ஊதியம் : ரூ5,40,056/-). 52. கிரய பத்திரம் - சாக்கோட்டை புல எண். 45/1, 87/5, 87/5A1B, மனை எண். 90A. 53. திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2013 - 2014 ஆண்டுக்கான வருமான வரி ரூ.21,000/- (ஆண்டு ஊதியம் : ரூ.6,88,730/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P.54. திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2014 - 2015 ஆண்டுக்கான வருமான வரி ரூ.31,206,/- (ஆண்டு ஊதியம் : ரூ.6,81,091/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P. 55. திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2015 - 2016 ஆண்டுக்கான வருமான வரி ரூ.38,994/- (ஆண்டு ஊதியம் : ரூ.7,91,386/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P. 56.திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2016 - 2017 ஆண்டுக்கான வருமான வரி ரூ.70,909/- (ஆண்டு ஊதியம் : ரூ.9,39,591/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P. 57. திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2017 - 2018 ஆண்டுக்கான வருமான வரி ரூ.54,450/- (ஆண்டு ஊதியம் : ரூ.9,33,548/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P. 58. திரு.பாலசுப்ரமணியன் அவர்களின் 2018 - 2019 ஆண்டுக்கான வருமான வரி ரூ.51,098/- (ஆண்டு ஊதியம் : ரூ.9,64,266/-) நிரந்தர கணக்கு எண் AAHPB2271P. 59. கிரய பத்திரம் - 1483/2018, நாச்சியார்கோவல், சார் பதிவாளர் அலுவலகம். 60. GRTதங்க நகை மாளிகையில் 1.12.2019-ல் ரூ.1,26,834/-மதிப்பிலான பழைய தங்க நகைகளை (30.648 கிராம்) மாற்றி மேலும் ரூ.22,040/- செலுத்தி தங்க செயின் வாங்கிபதற்கான ரசீது எண்.GRM920SA085620. 61. GRTதங்க நகை மாளிகையில் 1.12.2019-ல் ரூ.4,72,950/-மதிப்பிலான தங்க செயின், தோடு, தொங்கல் வாங்கியதற்கான ரசீது எண்.GRM920SA085599. 62. GRT தங்க நகை மாளிகையில் 1.12.2019-ல் பழைய தங்க நகைகளை ரூ.3,75,021/- க்கு விற்றதற்கான ரசீது. 63. GRT தங்க

நகை மாளிகையில் 1.12.2019-ல் ரூ.1,60,050/- க்கு தங்க வளையல்கள் வாங்கியதற்கான ரசீது எண்GRM920SA085622. 64. GRTதங்க நகை மாளிகையில் 1.12.2019-ல் ரூ.1,76,962/-மதிப்பிலான பழைய தங்க நகைகளை மாற்றி மேலும் ரூ.30,250/- செலுத்தி புதிய தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 65. GRTதங்க நகை மாளிகையில் 1.12.2019-ல் ரூ.1,87,634/-மதிப்பிலான பழைய தங்க நகைகளை மாற்றி மேலும் ரூ.14,770/- செலுத்தி தங்க செயின் வாங்கியதற்கான ரசீது. 66. GRT தங்க நகை மாளிகையில் 28.01.2021-ல் ரூ.1,32,800/- க்கு 25கிராமிற்கு தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 67.GRT தங்க நகை மாளிகையில் 12.12.2020-ல் பின்வரும் நகைகள் வாங்கியதற்கான ரசீது எண். GRM920SA085954. நெக்லஸ் - ரூ.3,42,834/- (65.29 கிராம்) 4 பென்டன் - ரூ.2,13,832/- (48.91 கிராம்) நெக்லஸ் - ரூ.1,13,730/- (21.271 கிராம்) (GRM920SA085947) நெக்லஸ் - ரூ.7,93,876/- (143.55 கிராம்) பென்டன் - ரூ.57,000/- 68. GRT தங்க நகை மாளிகையில் 05.09.2020-ல் பின்வரும் நகைகள் வாங்கியதற்கான ரசீது எண். நெக்லஸ் - ரூ.4,74,048/- (38.310 கிராம்) பென்டன் - ரூ.6,14,495/- (128.120 கிராம்) பென்டன் - ரூ.1,76,514/- (31.935 கிராம்) பென்டன் -ரூ.1,03,894/- (24.340 கிராம்) 69. GRTதங்க நகை மாளிகையில் 05.09.2020-ல் ரூ.1,71,032/- (30.955 கிராம்) மதிப்பிலான பழைய தங்க நகைகளை மாற்றி மேலும் ரூ.22,750/- செலுத்தி புதிய தங்க நகை வாங்கியதற்கான ரசீது எண்.3111. 70. GRTதங்க நகை மாளிகையில் 05.09.2020-ல் ரூ.1,82,347/- (33.143 கிராம்) மதிப்பிலான தங்க நகை வாங்கியதற்கான ரசீது எண்.3110. 71. GRTதங்க நகை மாளிகையில் 22.11.2020-ல் ரூ.1,49,084/- (27.066 கிராம்) மதிப்பிலான தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 72. GRTதங்க நகை மாளிகையில் 22.11.2020-ல் ரூ.47,007/- (09.09 கிராம்) மதிப்பிலான தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 73. GRTதங்க நகை மாளிகையில் 10.10.2020-ல் ரூ.50,000/- (8.07 கிராம்) மதிப்பிலான தங்க நகை (ஜிமிக்கி) வாங்கியதற்கான ரசீது. 74. GRTதங்க நகை மாளிகையில் 10.10.2020-ல் ரூ.3,320/- மதிப்பிலான வெள்ளி பொருட்கள் வாங்கியதற்கான ரசீது. 75. 19.10.2015-ல் ரூ.63,300/-(23.78 கிராம்) மதிப்பிலான தங்க நகை பென்டன்) வாங்கியதற்கான ரசீது. 76. 20.08.2017-ல் ரூ.42,600/-(11.18 கிராம்) மதிப்பிலான தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 77. 23.08.2017-ல் ரூ.31,743/-(8.3 கிராம்) மதிப்பிலான தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 78.23.08.2017-ல் ரூ.31,631/-(8.15 கிராம்) மதிப்பிலான தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 79. 22.01.2018-ல் ரூ.17,570/-(5.2 கிராம்) மதிப்பிலான தங்க தோடு வாங்கியதற்கான ரசீது. 80. 26.10.2021-ல் ரூ.1,37,770/-(28.5 கிராம்) மதிப்பிலான தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 81. 27.1.2018-ல் ரூ.2,56,170/- (79.183 கிராம்) மதிப்பிலான பழைய தங்க நகைகளை மாற்றி மேலும் ரூ.1,03,600/- செலுத்தி புதிய தங்க நகை வாங்கியதற்கான ரசீது. 82. ஆவண எண் 154/15, 16 மருதா நல்லூர் கிராமம் திருமதி. ராஜலட்சுமி, திரு. சிங்காரவேலனுக்கு ரூ.20,00,000/-க்கு செய்து கொடுத்த கிரய பத்திரம் பா/Res. 83. நாச்சியார்கோவில் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1006/2017 கருப்பூர் கிராம புல எண். 99/13,13B. 84. கிரய ஆவண எண். 1483. 85. PACL India Limited ல் ரூ.30,000/- செலுத்தியதற்கான ரசீது எண்.0835717, நாள்.30.03.2011. 86. SBI General Insurance -Policy No. 062300596-க்குSBI A/C. NO. 40416041834, ரூ.2,00,000/- செலுத்தியதற்கான ரசீது. 87. கும்பகோணம் பதிவு மாவட்ட பதிவாளர் அலுவலக ஆவண எண் 3699/2014 திருமதி.சாந்தி, திருமதி.ராஜேஸ்வரிக்கு செய்து கொடுத்த கிரய பத்திரம், பெரியார் நகர், அண்ணலக்ரஹாரம், கும்பகோணம். 88. LIC Policy No. 758382406-க்கு(ரூ.2,00,000/-) வருடாந்திர தவணை ரூ.17,614/- செலுத்தியதற்கான ரசீது. 89. LIC Policy No. 753113962, 90. LIC Housing loan Receipt. 91. 18 ¾

பவுன் தங்க நகைகள் பின்வருமாறு. வளையல் -5 பவுன் - 1, டாலர் செயின் - 3 பவுன் - 1, ஆரம் - 7 பவுன் - 1, 3 ¾ பவுன் - 1 மேற்படி ஆவணங்கள் மற்றும் தங்க நகைகள் அனைத்தும் மீண்டும் நல்ல நிலையில் ADA திரு.பாலசுப்ரமணியன் மற்றும் அவரது மனைவி ராஜலெட்சுமி ஆகியோர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி வீடு சோதனையில் கைப்பற்றப்பட்ட தொகைக்கான விபரம் :

| வ. எண் | விபரம் | தொகை | |
|---|---|---|---|
| 1. | ஒரு வெள்ளை கவரில் முன்பக்கம் **To AO**என பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. | ரூ.9,000/- | 18x500 |
| 2. | இன்னொரு வெள்ளை கவரில் முன்பக்கம் **To Dy AO**என பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. | ரூ.20,000/- | 40x 500 |
| 3. | பேப்பரில் சுற்றி வைக்கப்பட்டிருந்த தொகையில் பேப்பரை பிரித்து பார்த்த போது அதில் முழுவெள்ளை தாளில் மற்றும் அரைதாளில் பணவிபரங்கள் எழுதப்பட்டிருந்தது. | ரூ.60,000/- | 21x 2000, 72x500 |
| | மொத்தம் | ரூ.89,000/- | |

மேற்படி வீடு சோதனை இன்று 10.12.2021-ந் தேதி 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு, கைப்பற்றுதல் நடவடிக்கை, வீடு சோதனை நடவடிக்கை மற்றும் இணைப்புகளுடன் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவாரூர் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

[signature] 11/12/21
DSP/V&AC/Thiruvarur

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். Cr.No.12/2021 u/s 102 Cr.P.C, 120B, 420, 409, 468, 471 of IPC and 13(1) (a), 12 of the P.C. Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை காலம்-7ல் கண்ட எதிரிகளின் பட்டியல்.

1. திரு.த.பாலசுப்பிரமணியன் 59/21 த/பெ தங்கவேல், வேளாண்மை உதவி இயக்குனர், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.
2. திரு.மாறன் 57/21, த/பெ நீலமேகம், துணை வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.
3. திருமதி.கோமதி 26/21, க/பெ கோபிநாத், வேளாண்மை அலுவலர், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.
4. திரு.கோபாலகிருஷ்ணன் 41/21, த/பெ லெட்சுமணன், உதவி விதை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.
5. செல்வி.சிந்து 24/21 த/பெ வரதராஜன், உதவி வேளாண்மை அலுவலர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.
6. திருமதி.சாந்தி 53/21 த/பெ சண்முகவேல், விதை கிடங்கு கண்காணிப்பாளர், (பிணையம்) வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.
7. திரு.சண்முகம் 31/21, த/பெ முருகன், கிடங்குமேலாளர், ஆலங்குடி, ஹரித்துவாரமங்கலம், வலங்கைமான் வட்டாரம், திருவாரூர் மாவட்டம்.
8. திரு.தியாகராஜன் 49/21, த/பெ. ஜெயராமன், உதவி விதை அலுவலர் பொறுப்பு கிடங்கு மேலாளர், ஆவூர் வேளாண்மை விரிவாக்க மையம்.
9. திரு.அண்ணாதுரை 39/21, த/பெ ராமச்சந்திரன், வேளாண்மை உதவி அலுவலர், ஊத்துக்காடு, வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
10. திரு.மாணிக்கவாசகம் 38/21 த/பெ ராஜமோகன், வேளாண்மை உதவி அலுவலர், ஆலங்குடி, வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
11. திரு.செந்தில்குமார் 48/21, த/பெ திருவநாவுகரசு, வேளாண்மை உதவி அலுவலர், வலங்கைமான், வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
12. திரு.இளையராஜா 39/21, த/பெ சின்னப்பிள்ளை, வேளாண்மை உதவி அலுவலர், ஆவூர் வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
13. திரு.மோகன்ராஜ் 36/21, த/பெ ராஜவேல், வேளாண்மை உதவி அலுவலர், கொட்டையூர், வலங்கைமான் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
14. திரு.விக்னேஷ், 26/21த/பெ பழனிச்சாமி, பிளாக் டெக்னாலஜி மேனேஜர், வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம், வலங்கைமான், திருவாரூர் மாவட்டம்.

11/12/21

Deputy Supdt. of Police,
Vigilance and Anti Corruption,
THIRUVARUR.